## (ஏ) சென்மதி நிலுவைகளும் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களும், சுற்றுலாவும்

இலங்கையின் சென்மதி நிலுவைகளையும் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களையும் ஒட்டிய நுணுக்கமான புள்ளிவிவரங்கள் பின்னிணைப்பு IIஇன் அட்டவணை 43–47இல் தரப்பட்டுள்ளன. சென்மதி நிலுவைத் தரவுகள் பெரும் பாலும் ஓராண்டில் பெறப்படும் வருவாய்கள் அல்லது கொடுப்பனவுகளைப் பதிவுசெய்யும் செலாவணிக் கட்டுப்பாட்டுப் பதிவுகளிலிருந்து பெறப்படுகின்றன. இதற்கு ஏனைய மூலங்களில் இருந்தும், குறிப்பாகத் திட்டமிடல் வேலை வாய்ப்பு அமைச்சிலிருந்து பெறப்படும் தகவல்கள் துணையாக விளங்குகின்றன. இவ்வெண்தொகைகள் சுங்கத்தரவுகளை அடிப்படையாகக்கொண்ட வெளிநாட்டு வர்த்தகப் பகுதியின் எண்தொகைகளைவிட வேறுபடும்.

### (1) பின்னணியும் போக்குகளும்

அண்மையாண்டுகளிற் சென்மதி நிலுவை நடைமுறைக் கணக்கில் நீங்காத பெரிய குறையை உண்டுபண்ணிய காரணிகள் 1970இல் தொடர்ந்து இயங்கி வந்தன. இறக்குமதி விலைகளின் குறிகாட்டி (1967 = 100) இல் 134ஆக விருந்து 1970இல் 140உக்கு அதிகரித்துள்ளது. ஏற்றுமதி விலைக்குறிகாட்டி 1969இல் 117இலிருந்து 1970இல் 118க்கு உயர்ந்ததனல் ஒருசிறு முன்னேற்றம் காணப்பட்டது. எனினும் இம்முன்னேற்றம் 88 புள்ளிகளிலிருந்து 84 புள்ளிகளுக்கு வீழ்ச்சியுற்ற வர்த்தக மாற்று வீதத்தின் சீர்கேடான நிலையைத் திருத்துவதற்குப் போதுமானதாக அமையவில்லை.

வர்த்தக மாற்று வீதம் பாதகமாகவிருந்தபோதும், ஏற்றுமதியளவுகளில் முன்னேற்றம் காணப்பட்டது. ஏற்றுமதியளவுக் குறிகாட்டி 98இலிருந்து 102 (1967 = 100) உக்கு அதிகரித்தது. இவ்வதிகரிப்பு, 1970இல் பெறப்பட்ட சிறிதளவான உயர்ந்த விலையதிகரிப்புக்களுடன் சேர்ந்து ஏற்றுமதி வருவாய்களை ரூ. 1,020 இலட்சத்திலிருந்து ரூ. 20,110 இலட்சமாக அதிகரிக்கச்செய்தது. ரூபாப் பெறுமதிகளில் இவ்வேற்றுமதி வருவாய்கள் 1967 நவெம்பர் மாதத்தில் நடைபெற்ற நாணயப் பெறுமதியிறக்கத்தின்பின் பெற்ற வருவாய்களில் மிகக் கூடியதாகும். இறக்குமதியளவுகளிலும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டது. இதன் குறிகாட்டி 1969இன் 108 புள்ளிகளிலிருந்து 1970இல் 102 புள்ளிகளுக்கு வீழ்ச்சியுற்றது. இதன் விளைவால் நடைமுறைக் கணக்கிலுள்ள குறை (அலுவலக மாற்றல்கள் தவிர்த்து) 1969இன் உச்ச மட்டமாகிய ரூ 8,430 இலட்சத்திலிருந்து 1970இல் ரூ. 4,680 இலட்சத்துக்கு குறைவுற்றுள்ளது.

நடைமுறைக் கணக்கின் குறையிற் கணிசமானளவு வீழ்ச்சியேற்பட்ட போதும் வெளிநாட்டு நிதி நிலையின் முகாமையில் பல சிக்கல்கள் தோன்றின. பலகாலமாக இடைவிடாது நிகழ்ந்த குறைகளின் ஒருமித்த விளைவால் இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்குகள் வெறுமையான நிலையை அடைந்திருந்தன. தற்போதைய நிலையில் அவை வெளிநாட்டுக் கொடுப்பனவுகளுக்கும் வருவாய்களுக்குமிடையிலேற்படக்கூடிய பெரிய வேறுபாட்டை ஈடுசெய்ய முடியாத நிலையிலுள்ளன. ஒதுக்குகளின் இக்குறைந்த மட்டம் நாணய அதிகாரிகளுக்கு 1970இல் பெரும் கவலையை உண்டுபண்ணிற்று.

மற்றுமொரு கவலைக்குரிய விடயமென்னவெனில் சென்மதி நிலுவைக் கொடுப்பனவுக் குறைகளை நிதியீட்டுவதற்கு இலங்கை குறுந்தவணைக் கடன் பாட்டில் அதிகம் தங்கியிருந்தமையேயாகும். சென்றுண்டுகளில் மத்திய வங்கி வெளிநாட்டு வங்கித் தாபனங்களுடனும் நிதி நிறுவனங்களுடனும் பல கொடுகடன் உடன்படிக்கைகளைக் கைக்கொண்டது. இதன் நோக்கம் நாட்டுக் கொடுப்பனவு நிலை எதிர்பாராதவிதமாக பாதகமாகச் சென்றல் அதனை ஈடு

செய்யவேண்டிய திரவச் சொத்துக்களின் தொகையை அதிகரிப்பதேயாகும். இப்படியான எதிர்பாராத சாத்தியமற்ற மாற்றல்களுக்காக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும் அண்மை ஆண்டுகளில் வெளிநாட்டுக் கொடுப்பனவுகளுக்கும் வருவாய்களுக்குமிடையிலேற்பட்ட இடைவெளியினை அடைப்பதற்கு இக்கொடுகடன்களில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. நிலைத்து நிற்கின்ற நிதிக் குறைகளுக்கு இத்தகைய குறுந்தவணைக் கொடுகடன்களைப் பயன்படுத்துதல் இலங்கைப் பொருளாதாரத்துக்கு அபாயத்தை உண்டுபண்ணும். இக்கொடுகடன்கள் கிடைக்கக்கூடியமை, இலங்கையின் நாணயச் செல்வாக்கில் மட்டுமன்றி இலங்கையின் கட்டுப்பாட்டுக்கப்பாலுள்ள உலக நாணயச் சந்தைகளில் நிலவும் நிலைகளிலும் தங்கியுள்ளது. வெளிநாடுகளில் இறுக்கமான நாணய நிலைமை நிலவினால் இக்கடன்கள் திருப்பியெடுக்கப்படக்கூடும் (அல்லது மீண்டும் வழங்கப்பட மாட்டாது). இதனால் இலங்கை வெளிநாட்டுப் பொருட்கள், பணிகள் மீது செய்யவேண்டிய செலவைக் குறைக்க நேரிடும். இத்தகைய செலவுக் குறைப்புக்கள் கையாளக்கூடியதாகவிருப்பினும் இதனில் ஏற்படும் தாமதம் போதியளவு ஒதுக்கு இல்லாதவிடத்து மத்திய வங்கிக்குப் பிரச்சினைகளை உண்டுபண்ணும்.

1963ஆம் ஆண்டுதொடக்கம் நாணய விதிச்சட்டத்தின் 68ஆம் பிரிவின் கீழ் அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட பல அறிக்கைகளில் இடைவிடாது சீர்கேடடைந்து வரும் வெளிநாட்டுச் செலாவணிபற்றிக் கூறப்பட்டு வந்துள்ளது. 1970இல் நாணயச் சபை மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளின் திரவ நிலையையிட்டு மேலும் அறிக்கைகளைத் தொடர்ந்து ஒப்படைத்து வந்தது.

1970 மே மாதத்தில் புதிய அரசாங்கம் பதவியேற்றபொழுது வெளிநாட்டுச் செலாவணியை ஆராய்ந்து முடிவெடுப்பதற்காக அது உடனடியாகப் பொது உத்தரவுச் சீட்டுத் திட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தது. அண்மையில் இலங்கையின் சென்மதி நிலுவை நிலை மெச்சத்தக்களவு முன்னேற்றம் அடைவதற்கான சான்றுகள் எதுவுமில்லாத நிலையில் பொது உத்தரவுச் சீட்டைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதைவிட வேறேதும் முடிவெடுக்க முடியாமலிருந்தது. இதனால் எல்லா இறக்குமதிகளையும் தனியார் இறக்குமதி உத்தரவுச் சீட்டின்கீழ்க் கொண்டுவருவதெனவும், முந்துரிமைகளின் அடிப்படையிற் பங்குமுறைகளை வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

எனினும், பணிகள் கணக்கில் வட்டிக் கொடுப்பனவுகளிலேற்பட்ட அதிகரிப்பு 1970இற் கொடுப்பனவுக் குறையை மேலும் சீர்கேடடையச் செய்தது. ஆனால் சுற்றுலா வருவாய்கள் 1969இன் ரூ. 170 இலட்சத்திலிருந்து 1970இல் ரூ 220 இலட்சத்துக்கு ஏறக்குறைய 30 சதவீதத்தால் அதிகரித்து முதன்முறையாக வெளிநாட்டுப் பயணக் கணக்கில் ஒரு மிகையை உண்டு பண்ணிற்று.

வணிகப் பொருட் கணக்கிலேற்பட்ட முன்னேற்றத்தினாலேயே, 1970இல் வெளிநாட்டு வளங்களின் இடைவெளியில் நியாயமானளவு வீழ்ச்சி ஏற்பட்டது. இம்முன்னேற்றம் நல் நம்பிக்கையை உண்டுபண்ணமுடியாது. ஏற்றுமதி வருவாய்களிற் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டபோதும் இலங்கையின் நடைமுறைக் கொடுப்பனவுகளுக்கும் வருவாய்களுக்குமிடையிலுள்ள இடைவெளியோடு ஒப்பிடுமிடத்து இது போதாமல் இருக்கின்றது. சிறு ஏற்றுமதிப் பொருட்களிலிருந்து பெற்ற வருவாய்கள் கணிசமானளவில் அதிகரித்தமை உற்சாகமளிப்பதாக அமைகின்றது. சுங்கத் தரவின்படி இவற்றின் ஏற்றுமதிகள் 1969இன் ரூ. 1,612 இலட்சத்திலிருந்து 1970இல் 1,985 இலட்சத்துக்கு 23 சதவீதத்தால் அதிகரித்துள்ளன. வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம் வழங்கும் ஊக்கம் இப்பொருட்களின் ஏற்றுமதி வருவாய்களை அதிகரிக்குமென எதிர்பார்த்தாலும், இவ்வதிகரிப்புத் தொடர்ந்து நீடிக்குமென்பது ஐயத்துக்குரிய விடயமாகும்.

உள்நாட்டுப் பொருளாதாரத்தைப் பாதிக்காவண்ணம் இறக்குமதிகளை 1970 மட்டத்தில் வைத்திருக்கலாமோ என்பதும் ஐயத்துக்குரிய விடயமாகும். ஒரு பக்கத்தில் குடித்தொகை அதிகரிப்பினுல் மேலதிக இறக்குமதிகளைப் பெற வேண்டியுள்ளது. மறுபக்கத்தில் பெரும்பாலான அபிவிருத்திகளைப் பெறுவதற்காகத் தொடங்கப்பட்டிருக்கும் பல்வேறு முதலீட்டத் திட்டங்களுக்கும் மேலதிக இறக்குமதிகள் தேவைப்படும்.

இறக்குமதிகளை மட்டுப்படுத்தல் பொருளாதாரத்தின் வளர்ச்சியினைத் தடை செய்யுமென்ருலும் தற்போதைய நிலை தொடர்ந்து நீடிக்குமாயின் எங்கள் நாட்டின் இறக்குமதியாற்றல் படிப்படியாகக் குறைந்து செல்லும். அதிகரிக்கும் கடன் பணிச்சுமைக்கு ஒரு பகுதியை ஒதுக்கீடு செய்தபின்பு இறக்குமதிகளுக்குக் கிடைக்கக்கூடிய செலாவணி ஒரு குறைந்தளவாகவேயிருக்கும். இறக்குமதி விலைகள் தொடர்ந்து உயர்வுற்றுச் சென்ருல் இறக்குமதி ஆற்றல் அதேயளவால் குறைவுறும்.

இந்நிலையில் நாட்டின் வெளிநாட்டு நிதிகளை நலமான அடிப்படையில் அமைப்பதற்காகப் புது அரசாங்கம் எடுத்துள்ள கொள்கை நடவடிக்கைகள் ஊக்கத்தையளிப்பதாக அமைந்துள்ளன. அரசாங்கம் மேற்கொண்டுள்ள அநேகமான அலுவலக அறிக்கைகளில் சென்மதி நிலுவையின் மோசமான நிலையையும் அதனைப் பாதுகாப்பதன் தேவை பற்றியும் பொதுமக்களின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளது. வரவுசெலவுத்திட்டத்திற் கொண்டுவரப்பட்டுள்ள சில நடவடிக்கைகள் இறக்குமதிகளுக்கான கேள்வி விரிவை மட்டுப்படுத்துவதற்கு உதவியளிக்கும். இந்நடவடிக்கைகளில் முக்கியமானவை பின்வருமாறு:

(அ) வங்கிக் கடன்களுக்கூடாக நிதியீட்டப்பட்ட வரவுசெலவுத் திட்டக் குறையின் அளவினைக் குறைத்தல்;

(ஆ) அரசாங்கப்பிணைகள், சேமிப்பு வைப்புக்கள் என்பவற்றின் மீதான வட்டிவீதத்தினை அதிகரித்தல்;

(இ) ஊழியர் சேமநிதிக்கான உதவு தொகைகளின் வீதத்தை அதிகரித்தல்;

(ஈ) புதிய கட்டாய சேமிப்புத்திட்டம்.

நாட்டின் கைத்தொழிற் கொள்கையின் ஆக்கத்திலும் சென்மதி நிலுவை நிலைமையைக் கணக்கிலெடுக்க அரசாங்கம் முயற்சி செய்துள்ளது. (எடுத்துக்காட்டாக) புதிய கைத்தொழிற் செயற்திட்டங்களுக்கு அனுமதி வழங்கும்போது இறக்குமதிகளைச் சேமிப்பதன் மூலம் (முக்கியமாக உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்துவதனுல்) அல்லது புதிய ஏற்றுமதிகளை வளர்ப்பதன் மூலம் சென்மதி நிலுவைகளுக்கு உதவும் கைத்தொழில்களுக்கு மட்டுமே முந்துரிமை வழங்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

இந்நடவடிக்கைகளின் முழுத் தாக்கமும் நீண்ட காலத்திலேயே கிடைக்கக் கூடியதாயிருக்கும். இந்நடவடிக்கைகள் ஓரளவு சம நிலையைக் கொண்டு வரும் வரைக்கும் நாடு சென்மதி நிலுவை இடர்பாடுகளை ஏற்று நடக்க வேண்டியிருக்கும்.

## (2) 1970இல் வெளிநாட்டு வளங்களும் அவற்றின் பயன்பாடும்

*1970இல் இலங்கைச் சென்மதி நிலுவைகளின் செயலாற்றங்களின் விவரங்கள் 1969ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அட்டவணை 'அ' இற் காட்டப்பட்டுள்ளன. முந்திய ஆண்டினைப் போலவே நடைமுறைக் கணக்கிலே தொடர்ந்து குறை காணப்பட்டது. எனினும் 1969இற் காணப்பட்ட ரூ. 8,430 இலட்சங்கொண்ட குறை இவ்வாண்டில் ரூ. 4,680 இலட்சத்துக்குக் குறைக்கப்பட்டுள்ளது.*

### *(அ) வணிகப் பொருட் கணக்கு*

*செலாவணிக் கொடுக்கல்வாங்கல் அடிப்படையிற் பதிவுசெய்யப்பட்ட இவ்வாண்டுக்கான ஏற்றுமதி வருவாய்கள் ரூ 20,110 இலட்சமாக அமைந்து 1969இலும் விட ரூ. 1,020 இலட்சம் அதிகரிப்பைக் காட்டின. இத்தொகை வெளிநாட்டுச் செலாவணி வரவுசெலவுத்திட்ட நோக்கங்களுக்காக மதிப்பிடப்பட்ட தொகையாகிய ரூ. 20,080 இலட்சத்துக்கு ஏறக்குறைய சமமாகவிருந்தது. மறு பக்கத்தில் இறக்குமதிக் கொடுப்பனவுகள் ரூ. 23,360 இலட்சமாக விளங்கி (உதவி உடன்படிக்கைகளினூடாக நிதியீட்டப்பட்ட இறக்குமதிகளும் உட்பட) 1969இலும் விட ரூ. 3,190 இலட்சம் குறைவாகவிருந்தன. இலங்கையின் சொந்த வளங்களினால் நிதியீட்டப்பட்ட இறக்குமதிகளின் பெறுமதி ரூ. 18,670 இலட்சமாகும். ஏற்றுமதி வருவாய்களிலேற்பட்ட கணிசமானளவு முன்னேற்றமும் இறக்குமதிகளின் உட்பாய்வினை நாடு கட்டுப்படுத்த முடிந்தமையும் வணிகப் பொருட் கணக்குக் குறையின் வீழ்ச்சிக்குக் காரணமாகவிருந்தன.*

*ஏற்றுமதி வருவாய்களிலேற்பட்ட அதிகரிப்பு 1970இலிருந்து பங்கர் எண்ணெயிலிருந்து பெற்ற விற்பனைகளை ஏற்றுமதி வருவாயென மறு பகுப்புச் செய்ததனாலாகும். முந்திய ஆண்டுகளில் இவ்வருவாய் சேவைக் கணக்கில் உட்படுத்தப்பட்டது. இந்த மறு பகுப்பாய்வு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பங்கர் எண்ணெயின் விற்பனையைக் கையேற்றதனால் ஏற்பட்டதாகும்.*

*வழங்குவோர் கொடுகடன் தொடர்ந்து கிடைத்தமையால் இலங்கை தனது சொந்தச் செலாவணி வளங்களைப் பயன்படுத்தாமல் ரூ. 4,690 இலட்சம் பெறுமதியுள்ள பொருட்களை இறக்குமதி செய்யமுடிந்தது. 1969 உடன் ஒப்பிடும்போது உதவியினாலும், கொடுகடன்களாலும் நிதியீட்டப்பட்ட இறக்குமதிகள் ரூ.1,120 இலட்சங்கொண்ட வீழ்ச்சியைக் காட்டின. இலங்கையின் சொந்தச் செலாவணி வளங்களினால் நிதியீட்டப்பட்ட இறக்குமதிகள் ரூ. 2,070 இலட்சங்கொண்ட வீழ்ச்சியைக் காட்டின.*

*1969, 1970ஆம் ஆண்டுகளில் அ, ஆ, அனுமதிப் பங்கு இறக்குமதிகளுக்கு வழங்கப்பட்ட உத்தரவு சீட்டுகளையும், பொது உத்தரவுச் சீட்டு இறக்குமதிகளையொட்டித் திறக்கப்பட்ட நாணயக் கடிதங்களின் பெறுமதியையும் கீழ்வரும் அட்டவணை II (எ) 1 காட்டுகின்றது. இவ்விடயங்களின் கீழ்ப் பெறப்பட்ட உண்மையான இறக்குமதித் தரவுகள் அட்டவணை II (எ) 2 இல் தரப்பட்டுள்ளன.*

*1970இல் பொது உத்தரவுச் சீட்டு இறக்குமதிகளின் பேரில் ஆரம்பிக்கப்பட்ட நாணயக்கடிதங்களின் பெறுமதி ரூ. 1 350 இலட்சங்கொண்ட கூர்மையான வீழ்ச்சியும் 'ஆ' அனுமதிப்பங்கு உத்தரவுச் சீட்டுகளின் பெறுமதி ரூ. 6,050 இலட்சத்திலிருந்து ரூ. 7,850 இலட்சத்திற்கு அதிகரித்தமையும் 1970யூனில் பொது உத்தரவுச் சீட்டுத் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டமையினதும் அதனால் இவ்வசதிகளின் கீழ்ச்செய்யப்பட்ட சில இறக்குமதிகள் 'ஆ' அனுமதிப் பங்குத் திட்டத்துக்கு மாற்றப்பட்டதினதும் விளைவாகும்.*

## அட்டவணை II (எ) 1

## 969, 1970 இல் இறக்குமதிகளுக்காக* வழங்கப்பட்ட அனுமதிப்பங்கு உத்தரவுச் சீட்டு இறக்குமதிகளையொட்டித் திறக்கப்பட்ட நாணயக் கடிதங்களின் பெறுமதி

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | பெறுமதி | | மாற்றம் |
|---|---|---|---|
| | 1969 | 1970 | |
| உத்தரவுச் சீட்டுகள் | | | |
| அ அனுமதிப்பங்கு ... | 1,203 | 1,101 | — 102 |
| ஆ அனுமதிப்பங்கு ... | 605 | 785 | + 180 |
| மொத்தம் ... ... | 1,808 | 1,886 | + 78 |
| பொது உத்தரவுச் சீட்டு இறக்குமதிகளின் மீதான நாணயக் கடிதங்களின பெறுமதி ... | 374 | 135 | — 239 |
| **மொத்தம் ... ...** | **2,182** | **2,021** | **— 161** |

மூலம் : திட்டமிடல் வேலைவாய்ப்பு அமைச்சும், இலங்கை மத்திய வங்கியும்.

* "சொந்த வள" அடிப்படையில் மட்டும்.

## அட்டவணை II (எ) 2

## சொந்த வள அடிப்படையில் இறக்குமதிகள்(அ) 1969உம் 1970உம்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1969 | 1970(ஆ) |
|---|---|---|
| இறக்குமதிகள் | | |
| அ அனுமதிப்பங்கு உத்தாவுச் சீட்டுக்கள் ... ... | 1,237 | 1,002 |
| ஆ அனுமதிப்பங்கு உத்தரவுச் சீட்டுக்கள் ... ... | 422 | 612 |
| மொத்தம் ... ... ... | 1,659 | 1,614 |
| பொது உத்தரவுச் சீட்டின் கீழ் இறக்குமதிகள் ... ... | 415 | 253 |
| **மொத்தம் ... ... ...** | **2,074** | **1,867** |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

அ. குறுந்தவணைக் கொடுகடன்களினூல் நிதியீட்டப்பட்ட இறக்குமதிகளை உள்ளடக்கும்.

ஆ. தற்காலிகமானவை.

### (ஆ) பணிகள் கணக்கு

1969உடன் ஒப்பிடும்போது வணிகப் பொருட் கணக்கிலேற்பட்ட முன்னேற்றத்துக்கெதிராகப் பணிகள்கணக்கில் மேலும் சீர்கேடு ஏற்பட்டுள்ளதென அட்டவணை II (எ) 3 இலிருந்து தெரியவருகின்றது முந்திய ஆண்டிலேற்பட்ட ரூ. 970 இலட்சங்கொண்ட குறைவு 1970இல் ரூ. 1,430 இலட்சத்துக்கு அதிகரித்துள்ளது.

சேவைக் கணக்கிலேற்பட்ட நிலுவையின்மையின் சீர்கேட்டுக்கு இரண்டு காரணிகள் காரணமாகவிருந்தன. முன்பு கூறியது போல முதலாவதாக பகுப்பாய்விற் கொண்டுவந்த மாற்றம் துறைமுகப் போக்குவரத்திலிருந்து பெற்ற

### அட்டவணை II (எ) 3

### 1969 இலும் 1970 இலும் பணிகளின் கணக்கின் முக்கிய துறையிலேற்பட்ட மாற்றம்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | வரவு | | | பற்று | | | நிலுவை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1969 | 1970 | மாற்றம் | 1969 | 1970 | மாற்றம் | 1969 | 1970 |
| நாணயமில்லாத தங்கம் .. | — | — | — | — | 2 | + 2 | — | — 2 |
| துறை, போககுவரத்து காப்புறுதி ... .. | 128 | 110 | —18 | 34 | 35 | + 1 | + 94 | + 75 |
| வெளிநாட்டுப் போக்குவரத்து .. | 17 | 22 | + 5 | 22 | 20 | — 2 | — 5 | + 2 |
| முதலீட்டு வருமானம் .. | 11 | 11 | — | 120 | 153 | + 33 | — 109 | — 142 |
| (i) இலாபங்களும் பங்கிலாபங்களும் . | 1 | 1 | — | 52 | 52 | — | — 51 | — 51 |
| (ii) வட்டி ... ... | 10 | 10 | — | 68 | 101 | + 33 | — 58 | — 91 |
| அரசாங்கச் செலவு ... .. | 29 | 29 | — | 27 | 28 | + 1 | + 2 | + 1 |
| பல்வகைப் பணிகள் ... ... | 69 | 66 | — 3 | 141 | 128 | — 13 | — 72 | — 62 |
| தனியார் மாற்றல்கள் .. | 15 | 15 | — | 22 | 30 | + 8 | — 7 | — 15 |
| **மொத்தம் ...** | **269** | **253** | **— 16** | **366** | **396** | **+ 30** | **— 97** | **— 143** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

வருவாய்களில் குறைவினைக் கொண்டுவந்தது. இரண்டாவதாக அரசாங்கத்தினதும், நாணய அதிகாரிகளினதும் அதிகரித்த கடன்பாட்டினாலேற்பட்ட வட்டிக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பு மிக முக்கிய காரணமாக அமைந்தது. 1968இல் ரூ. 430 இலட்சமாக விளங்கிய வட்டிக்கொடுப்பனவுகள் 1969இல் ரூ. 680 இலட்சத்துக்கும் 1970இல் ரூ. 1,010 இலட்சத்துக்கும் அதிகரித்தன.

பல்வேறு பணிகளுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளிலும் சிறு வீழ்ச்சி ஏற்பட்டது. இவ்விடயத்தின் முக்கிய அமைப்புக்கள் வெளிநாட்டு ஆலோசனைப் பணிகள், தரகுகள் வெளிநாட்டில் விளம்பரம் செய்தல் ஆகியனவாகும்.

எனினும், பணிகள் கணக்கில் ஊக்கமளிக்கும் ஓரம்சம் யாதெனில் சுற்றுலாப் பயணிகளின் வருவாய்களிலேற்பட்ட அதிகரிப்பாகும். மிகை மதிப்புச் செலாவணி வீதம் வழங்கிய ஊக்கமும், விளம்பர இயக்கங்களின் நல் விளைவும், உள்ளூர்க் கைத்தொழிலின் ஆக்கத்திறமை அதிகரிப்பும் இவ்வருவாய்களை அதிகரிக்கச் செய்தன. சென்மதி நிலுவைகள் கணிக்கப்பட்ட நாட்கள் தொடக்கம் வெளிநாட்டுப் பயணத்தில் முதன் முறையாக மிகை காணப்பட்டது இம்முறையேயாகும்.

வெளிநாடுகளில் வேலை செய்யும் இலங்கையர்களின் உள் மாற்றல்களை முக்கியமாகக் கொண்ட தனியார் உள் மாற்றல்கள் 1969ஆம் ஆண்டு மட்டத்தில் மாற்றமுறாதிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

### (இ) மூலதனக் கணக்கு

நடைமுறைக் கணக்கில் சிறு முன்னேற்றம் ஏற்பட்டபோதும், 1970இல் மூலதனக் கணக்கு, சில அமைப்புப் பலவீன அம்சங்களைக் காட்டின. 1969இல் ஏற்பட்ட வெளிநாட்டு வளங்களின் உச்சமட்ட இடைவெளியாகிய ரூ. 12,350 இலட்சம் 1970இல் ஒரு சிறு வீழ்ச்சியைக் காட்டியபோதும், அட்டவணை 11(எ) 4இல் காட்டியவாறு அது உயர்ந்த மட்டமாகிய ரூ. 11,240 இலட்சத்திலிருந்தது.

அட்டவணை II (எ) 4

1969 இலும் 1970 இலும் வெளிநாட்டு வள இடைவெளிகள் நிதியீட்டப்பட்ட முறைகள்

| | 1969 | | 1970 | |
|---|---|---|---|---|
| | ப. இ. ரூ. | பங்கு % | ப. இ. ரூ. | பங்கு% |
| வள இடைவெளி ... ... ... | — 1,235 | | — 1,124 | |
| நிதியீட்டல் முறை ... ... ... | + 1,235 | 100 | + 1,124 | 100 |
| 1. வெளிநாட்டுச் சொத்துக்கள் ... ... | 86 | 7.0 | — 26 | — 2.3 |
| 2. வெளிநாட்டு வங்கிக் கடன்பாடு ... | 227 | 18.4 | 123 | 10.9 |
| 3. ப. நா. நி. எடுப்பனவுகள் ... .. | 77 | 6.2 | 57 | 5.1 |
| 4. இருபுடை வர்த்தக நிலுவைகள் ... | 18 | 1.5 | — 75 | — 6.7 |
| 5. குறுந்தவணை வர்த்தகக் கொடுகடன்கள் ... | 185 | 15.0 | 434 | 38.6 |
| 6. வழங்குவோர் கொடுகடன் ... ... | 176 | 14.2 | 85 | 7.5 |
| 7. பண்ட உதவி ... ... ... | 272 | 22.0 | 263 | 23.4 |
| 8. திட்ட உதவி ... .. .. | 89 | 7.2 | 36 | 3.2 |
| 9. நன்கொடைகள் ... ... | 46 | 3.7 | 75 | 6.7 |
| 10. தனியார் மூலதனம் ... ... | 9 | 0.7 | 10 | 0.9 |
| 11. ஏனையவை ... ... ... | 32 | 2.6 | 53 | 4.7 |
| 12. சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ... ... | — | — | 78 | 6.9 |
| 13. பிழைகளும் தவறுகளும் ... ... | 18 | 1.5 | 11 | 1.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

பொருளாதாரத்துக்கான அதிகரித்த வளங்களின் தேவைக்கு முக்கிய காரணம் அதிகரித்த மூலதன மீளக் கொடுப்பனவுகள் நிதியீட்டவேண்டியிருந்தமையேயாகும். அரசாங்கத்திலும் மத்திய வங்கியினாலும் பெறப்பட்ட படுகடன் தீர்ப்பனவு 1969இன் ரூ. 3,610 இலட்சத்திலிருந்து 1970இல் ரூ. 6,290 இலட்சத்துக்கு 74 சதவீதத்தால் அதிகரித்தது. இத்தொகையில் ரூ.1,750 இலட்சம் அல்லது 28 சதவீதம் மட்டுமே அரசாங்கத்தால் உடன்படிக்கை செய்யப்பட்ட நீண்ட காலக் கொடுகடனாக அமைந்தது. மீதியாகிய ரூ.4,540 இலட்சமும் குறுந் தவணைப் பொறுப்புக்களின் தீர்ப்பனவாக விளங்கிற்று.

1969இல் பன்னாட்டு நாணய நிதியுடனான கொடுக்கல்வாங்கல்களில் இலங்கை தனது பொறுப்புக்களைப் பெருமளவில் தீர்ப்பனவு செய்தமை முக்கியமானதோர் அம்சமாகவிருந்தது. ப. நா. நிதியிலிருந்து எடுப்பனவு வசதிகளைப் பயன்படுத்தத் தொடங்கிய 1961ஆம் ஆண்டிலிருந்து தேறிய மீளக் கொள்வனவுகள் ரூ. 90 இலட்சமாக விளங்கிய 1969ஆம் ஆண்டுவரை இந்நிதியிலிருந்தான இலங்கையின் எடுப்பனவுகள் மீளக்கொள்வனவுகளைவிட அதிகரித்துக்காணப்பட்டன. இதற்கு மாறாக 1970இல் ரூ. 570 இலட்சம் எடுப்பனவு செய்யப்பட்டிருக்க ரூ. 1,610 இலட்சம் மீளக்கொள்வனவு செய்யப்பட்டது. 1970இல் நிதியீட்டப்படவேண்டியிருந்த உயர்ந்தளவு மூலதனக் கொடுப்பனவுகளுக்கு இது ஒரு காரணமாக அமைந்தது.

1970இல் பதிவு செய்யப்பட்ட பெருமளவு வள இடைவெளியினை நிதியீட்டுவதற்கு 1969ஆம் ஆண்டுபோல வெளிநாட்டுக் கடன்பாடு பெறவேண்டியிருந்தது. நீண்ட தவணைக் கடன்கள் ரூ. 3,840 இலட்சமாக விளங்க, அரசாங்கத்தாலும் மத்திய வங்கியாலும் பெறப்பட்ட குறுந்தவணைக் கடன்பாடுகள் ரூ. 6,670 இலட்சமாக விளங்கின. நீண்டகால நிதி முன்னைய ஆண்டினைவிட 29சதவீதம் குறைந்து காணப்பட்டவிடத்து, குறுகிய காலக்கடன் ஒழுங்குகள் 28சதவீத அதிகரிப்பைக் காட்டின. எனினும் இக்கடன்பாடு முழு வள இடைவெளியினை நிரப்புவதற்குப் போதாதிருந்தது. இதனால் முக்கிய எடுப்பனவு உரிமைகளுக்குக் கீழான ரூ. 780 இலட்சங் கொண்ட முழு ஒதுக்கீடும் ரூ. 750 இலட்சங்கொண்ட அலுவலக நன்கொடைகளும் பயன்படுத்தவேண்டியிருந்

தது. எனினும், ரூ. 260 இலட்சங்கொண்ட சிறு தொகை வெளிநாட்டு ஒதுக்குகளுக்குச் சேர்க்கப்பட்ட இதேவேளையில், இலங்கையால் கொடுப்பனவு உடன்பாடுகள் கணக்குக்குக் கொடுக்கப்படவேண்டிய தொகை ரூ. 750 இலட்சமாகக் குறைக்கப்பட்டது.

வள இடைவெளியின் அளவைவிட, சமநிலையின்மைக்குக் காரணமாகவிருந்த மூலத்திலேற்பட்ட மாற்றமே 1970இல் சென்மதி நிலுவை அபிவிருத்திப் போக்குகளில் கவலைக்குரிய விடயமொன்ருக அமைந்தது. சென்ருண்டுகளில் நடைமுறைக் கணக்குக் குறையை நிவர்த்தி செய்வதற்கும், வெளிநாட்டுக் கடன்பாட்டினை நியாயமானளவு தீர்ப்பனவு செய்வதற்கும் வெளிநாட்டு வளங்கள் அதிகளவு திரட்டப்பட வேண்டியிருந்தன. 1970ஆம் ஆண்டில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றம் யாதெனில், ரூ. 11,240 இலட்சங் கொண்ட மூலவள இடைவெளியில் ரூ. 4,680 இலட்சம் அல்லது 41.6 சதவீதம் மட்டுமே நடைமுறைக் கணக்கிலேற்பட்ட இடைவெளியாகவிருந்தமையாகும். மீதியாகிய ரூ. 6,560 இலட்சம், மூலதன மீளக் கொடுப்பனவுகளாகும். 1969 ஆம் ஆண்டிற்கூட மிகப்பெரிய தொகையாகிய ரூ. 12,350 இலட்சங்கொண்ட இடைவெளியேற்பட்டபோது 31.7 சதவீதமே மூலதனக் கொடுப்பனவுகளுக்குப் பயன்படுத்தப்பட்டது. மீதி, நடைமுறைக் கணக்குக் குறைக்குப் பயன்படுத்தப்பட்டது.

அதிகப்படியான மூலதனக் கொடுப்பனவுகள், ஒரு பக்கத்தில் 60 ஆண்டுகளின் பிற்பகுதியில் உடன்படிக்கை செய்யப்பட்ட நீண்ட காலக் கடன்களின் மீளக் கொடுப்பனவுக்கு வழங்கப்பட்ட சலுகைக் காலம் முடிந்துவிட்டதென்பதையும், கடனின் மீளக் கொடுப்பனவு தொடங்கிவிட்டதென்பதையும் காட்ட, மறுபக்கத்தில் இது கடந்த காலத்தில் நடைமுறைக் கணக்கிலுள்ள குறைகளைத் தீர்ப்பதற்குப் பெறப்பட்ட அதிகளவிலான குறுந்தவணைக் கடன்பாடுகள் கடன் தீர்ப்பதில் வெளிநாட்டு வளங்களில் ஒரு பெரும்பகுதியைச் செலவிடுகின்றனவென்பதைக் காட்டுகின்றன.

### (3) வெளிநாட்டுச் சொத்துக்கள்

1970 திசெம்பர் இறுதியில் இலங்கையின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ. 4,026 இலட்சமாக விளங்கின (பின்னிணைப்பு 11இன் அட்டவணை 47ஐப் பார்க்கவும்). சென்மதி நிலுவைகளின் குறைகளை நிதியீட்டுவதற்குக் கிடைக்காத ஸ்டேர்லிங் கடன், கடன் கரைப்பு நிதியத்துக்கான உதவுதொகைகளை நீக்கிப் பார்த்தால் தேறிய ஒதுக்கு ரூ. 3,666 இலட்சமாக வலிவுற்றது.

மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களில், மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்கு ரூ. 1,940 இலட்சமாக விளங்கி, 1969இனைவிட ரூ. 288இலட்சம் அதிகமாகவிருந்தது. அரசாங்கத்தினதும், அரசாங்க முகவர் நிலையங்களினதும், நிறுவனங்களினதும் வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ. 580 இலட்சமாக விளங்கி முந்திய ஆண்டைவிட ரூ 155 இலட்சம் குறைவாகவிருந்தன. வர்த்தக வங்கிகளின் ஒதுக்குகள் ரூ. 1,506 இலட்சமாக விளங்கி ரூ. 122இலட்சங் கொண்ட அதிகரிப்பைக் காட்டின. வர்த்தக வங்கி நிலுவைகளின் முக்கிய பாகங்கள் வெளிநாட்டுச் செலாவணியும் ஏற்றுமதி உண்டியல் உடைமைகளுமாகும்.

1970இல் ரூ. 11,240 இலட்சங்கொண்ட வெளிநாட்டு வளத்தில் இடைவெளி இருந்தபோதும், இலங்கையில் வெளிநாட்டுச் சொத்துக்கள், ஸ்டேர்லிங் கடன், கடன் கரைப்பு நிதியம் நீங்கலாக ரூ. 391 இலட்சங்கொண்ட அதிகரிப்பைக் காட்டின. இவ்வேளையில், இவ்வதிகரிப்பு வெளிநாட்டுக் கடன் எடுப்புகளின் மூலமும், பன்னாட்டு நாணய நிதி வழங்கிய சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கீடு மூலமே ஏற்பட்டது.

1970ஆம் ஆண்டுக்கான சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் இலங்கைக்கான ஒதுக்கீடு ரூ. 780 இலட்சமாகும். ப. நா. நி. உடனான கொடுக்கல்வாங்கல்கள் உட்பட இவ்வாண்டுக்கான குறுந்தவணைக் கடன்பாடுகள் ரூ. 190 இலட்சமா

கும். சிறப்பு எடுப்பனவு உரிமைகளைத் திருப்பியமைப்பதற்குச் சராசரியாக நாட்டின் 30 சதவீத ஒதுக்கீடு பயன்படுத்தப்படாதிருக்க வேண்டும். சிறப்பு எடுப்பனவு உரிமை ஒதுக்கீட்டினை மீள நிரப்பல் செய்வதற்குவேண்டிய ரூ. 234 இலட்சத்துக்கும். தேறிய குறுந்தவணைப் பொறுப்புக்களின் அதிகரிப்புக்கும் இடமளிப்பின், வெளிநாட்டு ஒதுக்குகள் 1969மட்டத்தை விட உண்மையில் ரூ. 33இலட்சத்தால் வீழ்ச்சியுற்றுள்ளதென்றே கொள்ளவேண்டும்.

## (4) சுற்றுலா

சுற்றுலா, இலங்கைக்கு வெளிநாட்டுச் செலாவணியினைக் கொடுக்கும் ஒர ளவு முக்கிய மூலவளமாகிவிட்டது. சுற்றுலாப் பயணிகளின்[1] வருகையும், அவ் வருகையினுல் அதிகரித்துள்ள வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களும், மேலும் அதனுடைய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க விரிவினைக் காட்டுகின்றன; தொடக்க முயற்சிகளைத் தவிர, மூல வாய்ப்பு வளம் அறுபதாம் ஆண்டுவரை பயன்படுத்தப்படவில்லை.

1937ஆம் ஆண்டில் இலங்கையில் சுற்றுலாப் பயணச் சபையொன்று நிறு வப்பட்டபோதும், போர் தொடங்கிய காரணத்தினுல் இச்சபையினை மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. 1948ஆம் ஆண்டு நாடு சுதந்திரமடைந்ததற் குப் பின்பு அரசாங்கத்தினுல் திரும்பவும் சுற்றுலாப் பயணச் சபையொன்று சுற்றுலாப் பயணத்தினை ஊக்குவிப்பதற்காக நிறுவப்பட்டது. இச்சபை நீண்ட காலமாகத் தொழிலாற்றி வந்தாலும், மிகச்சிறிய அளவு முன்னேற்றத்தினையே ஏற்படுத்தியது. 1966ஆம் ஆண்டு சுற்றுலாப் பயணிகள் சபைக்குப் பதிலாக சுற்றுலாப் பயண ஊக்கத்தினையும், அதாவது அபிவிருத்தியினையும் கடமையா கக்கொண்ட இலங்கை 'சுற்றுலாப் பணியகம்' ஒன்று அமைக்கப்பட்டது.

1967ஆம் ஆண்டுவரை ஆண்டொன்றுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணத் தர் தொகை ஏறக்குறைய 19,000ஆக அமைந்திருக்க, சுற்றுலாவிலிருந்து கிடைத்த வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களும் ஏறக்குறைய மாருது ஒரே யளவாகவிருந்தன. இதற்கு முக்கிய காரணம் சுற்றுலாவின் அபிவிருத்திபற்றி ஒரு சிறந்த திட்டவமைப்பு இல்லாமையேயாகும். 1967ஆம் ஆண்டில் இலங் கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளினது தொகை, 1966ஆம் ஆண்டுடன் ஒப்பு நோக்குமிடத்து, 23,666ஆக உயர்ந்து 24.8 சதவீத அதிகரிப்பினைக் காட்டி யது. இதன் பின்பு மாருத உயர்ந்த போக்கினையே கொண்ட இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணத்தர் தொகை 1967இன் 23,666இலிருந்து 1969இல் 40,204ஆக அதிகரித்தது. இந்த மூலத்திலிருந்து கிடைத்த வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களும் 1967இல் ஐ. அ. $ 12.1 இலட்சத்தில் இருந்து ஐ.அ. $ 28.6 இலட்சத்திற்கு உயர்ந்தன.

### அட்டவணை II (எ) 5
### சுற்றுலாப் பயணிகளின் போக்கு

| ஆண்டு | மொத்த வருகை | இந்தியர்கள் தவிர்த்து மொத்த வருகை | இந்தியர்கள்தவிர்த்து வருகை தந்தவர்களது குறிகாட்டி (1961=100) |
|---|---|---|---|
| 1961 ... | 27,777 | 17,724 | 100.0 |
| 1962 ... | 26,397 | 16,106 | 90.9 |
| 1963 ... | 18,440 | 15,103 | 85.2 |
| 1964 ... | 18,872 | 16,002 | 90.3 |
| 1965 ... | 19,781 | 15,118 | 85.3 |
| 1966 ... | 18,969 | 15,325 | 86.5 |
| 1967 ... | 23,666 | 19,043 | 107.4 |
| 1968 ... | 28,272 | 21,469 | 121.1 |
| 1969 ... | 40,204 | 31,363 | 176.9 |
| 1970 ... | 46,247 | 35,561 | 200.6 |

மூலம்: இலங்கைச் சுற்றுலாச்சபை.

1. பயணிகளென்ற பதம் ஓரிரவு அல்லது அதற்குக் கூடுதலாக இலங்கையில் தங்கும் விருந்தாளிகளைக் குறிக்கிறது.

1967ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்திலேற்பட்ட அதிகரிப்பு, சுற்றுலாச்சபையினால் எடுக்கப்பட்ட ஊக்கத்தினதும், நிறுவன முயற்சிகளினதும் சிறந்த நடவடிக்கைகளினாலும், இக் கைத்தொழிலில் செய்யப்பட்ட முதலீட்டத்தினாலுமாகும்.

**1970இல் சுற்றுலா**

1970ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகள் தொகை 46,247ஆக அமைந்து, சென்ற ஆண்டிலும் பார்க்க 15 சதவீதம் அல்லது 4,013 கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. இத்தொகை, இவ்வாண்டிலே ஊகிக்கப்பட்ட தொகையான 51,000இல் 5,000 குறைவானதாகும். இம் மிதமான விரிவு, இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் அவர்களது வருகையில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் ஏற்பட்டதாகும்; இருந்தபோதும் 1970ஆம் ஆண்டு சுற்றுலாவிலிருந்து பெறப்பட்ட ரூ.215 இலட்சம் (36 இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்கள்) கொண்ட வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் 1969ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து ரூ. 45 இலட்சம் அல்லது 26.5 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. 1970ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணத்திலிருந்து கிடைத்த வருவாய்கள், பயணிகளின் தொகையிலும் பார்க்க உயர்ந்த விகிதத்தால் அதிகரித்தன. 1970ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணத்திலிருந்து கிடைத்த மொத்த வெளிநாட்டு வருவாய்கள், மொத்த ஏற்றுமதி வருவாய்களில் ஒரு சதவீத அளவினையே கொண்டிருந்தன.

**அட்டவணை II (ஏ) 6**

**சுற்றுலாப் பயணத்திலிருந்து பெற்ற வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள்**

| ஆண்டு | மொத்த வருவாய்கள் (ஆ. ரூ.) | ஐ. அ. $ ஒன்றுக்குச் சமம் (ஆ:டொ.) | சென்ற ஆண்டினை விட % அதிகரிப்பு /குறைவு | குறிகாட்டி (1961 =100) |
|---|---|---|---|---|
| 1961 ... | 7,661 | 1,609 | — | 100.0 |
| 1962 ... | 5.265 | 1,106 | — 31.3 | 68.7 |
| 1963 ... | 5,532 | 1,162 | + 5.1 | 72.2 |
| 1964 ... | 5,462 | 1,147 | — 1.3 | 71.3 |
| 1965 ... | 6,049 | 1,271 | + 10.8 | 79.0 |
| 1966 ... | 6,116 | 1,285 | + 1.1 | 79.9 |
| 1967 ... | 5,859 | 1,211 | — 5.7 | 75.3 |
| 1968 ... | 10,533 | 1,770 | + 46.2 | 110.0 |
| 1969 ... | 17,032 | 2,862 | + 61.7 | 177.9 |
| 1970 ... | 21,503 | 3,614 | + 26.3 | 224.6 |

மூலம்: இலங்கைச் சுற்றுலாச் சபை.

1970இல், 49.5 சதவீதப் பயணிகள் மேற்கு ஐரோப்பாவிலிருந்தும், 32.2 சதவீதத்தினர் ஆசியாவிலிருந்தும், 12.6 சதவீதத்தினர் வட அமெரிக்காவிலிருந்தும், 3.0 சதவீதத்தினர் அவுத்திரேலியாவிலிருந்தும் வந்திருந்தார்கள்.

77.1 சதவீதங்கொண்ட சுற்றுலாப் பயணிகளினது வருகையின் நோக்கம் மனமகிழ்ச்சி அதாவது விடுமுறையைக் கழிப்பதற்காகவும், விளையாட்டிற் கலந்து கொள்வதற்காகவும், சுற்றுப் பயண நோக்கத்திற்காகவும், 8.7 சதவீதத்தினர் வியாபார நோக்கத்துடனும், அரசகருமத் தேவை, சொந்தத் தேவை ஆகிய இரண்டின்பேரிலும், மிகுதி 14.2 சதவீதத்தினர், சமயம், கலாச்

## அட்டவணை II (எ) 7

### இலங்கையின் சுற்றுலா வளர்ச்சி—முக்கிய அங்காடிகளிலிருந்து

| நாடு | வந்தவர்களது தொகை | | | ஆண்டினது சராசரி வளர்ச்சி வீதம் |
|---|---|---|---|---|
| | 1966 | 1969 | 1970 | 1966—1969 (%) |
| ஐ. அ. இரா. ... | 2,978 | 5,264 | 5,155 | 20.9 |
| ஐ. இரா. ... | 3,670 | 5,445 | 5,484 | 14.1 |
| மேற்கு சேர்மனி ... | 1,250 | 4,143 | 5,771 | 49.0 |
| பிரான்சு ... | 1,164 | 3,220 | 4,480 | 40.4 |
| இஸ்கந்திநேவியா .. | 378 | 2,532 | 2,363 | 88.5 |
| சுவிற்சலாந்து . | 597 | 1,657 | 2,117 | 40.6 |
| இத்தாலி ... | 376 | 1,072 | 1,054 | 41.8 |
| இந்தியா ... | 3,644 | 8,841 | 10,686 | 34.4 |
| மலேசியா ... | 718 | 1,077 | 1,388 | 14.5 |
| யப்பான் ... | 619 | 1,090 | 1,042 | 20.8 |
| அவுத்திரேலியா ... | 756 | 1,003 | 1,193 | 9.8 |

மூலம்: இலங்கைச் சுற்றுலாச் சபை.

சாரம், நண்பர்கள், உறவினர்களுக்குச் சமூகம் கொடுத்தல், போன்ற நோக்கங்களுக்காக இலங்கைக்கு வருகை தந்திருந்தனர். 1970ஆம் ஆண்டு 15 சதவீதங் கொண்ட பயணிகள் தொகை அதிகரிப்புக்குச் சுற்றுலாப் பயணத்தர்களுடைய மனமகிழ்வு நிகழ்ச்சிகளின் அதிகரிப்பே முக்கிய காரணமாகும். இந்த மனமகிழ்வு வகையினரால் 1969ஆம் ஆண்டு 30,207 ஆகவிருந்த சுற்றுலாப் பயணிகள் தொகை, 1970இல் 5,420 அல்லது 18 சதவீதங்கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்து 35,627ஆக அமைந்தது. சுற்றுலாப் பயணிகளின் ஏனைய பிரிவு 2144 அல்லது 48 சதவீத அதிகரிப்பினைக் காட்ட, வியாபாரப் பிரிவில் வீழ்ச்சி ஏற்பட்டது.

1970ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளால் மொத்தம் 4,70,000 இரவுகள் செலவிடப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 1969ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 16 சதவீத அதிகரிப்பினைப் பிரதிபலிக்கின்றது. 1970இல் 48.8 சதவீதங்கொண்ட வகுக்கப்பட்ட பொது இடவசதிகளில் மொத்த ஆண்டு இருப்பு வீதம் 1969இலும் பார்க்க 1.5 சதவீதப் புள்ளிகளால் குறைவானதாகும். இக்குறைவிற்கு 1969இன் முடிவில் 1,125 ஆகவிருந்து 1970இன் முடிவில் 1,600ஆக 475 அறைகளினூல் இருப்பிட இடவசதி அதிகரித்தமையே ஓரளவு காரணமாகும்.

அட்டவணை

1969/70 சென்

| | பத்து இலட்சம் | | |
|---|---|---|---|
| | 1969 | | |
| | வரவு | பற்று | தேறிய |
| **1. வணிகப் பொருட் கணக்கு** | | | |
| ஏற்றுமதிகள் (க. எ. பெ.) ... | 1,909 | | |
| இறக்குமதிகள் கொ. கா. க. (சொந்த வளங்கள்) ... | | 2,074 | |
| (உதவி இறக்குமதிகளும் நிரப்பலர் கொடுகடனும்) ... | | 581 | |
| மொத்த இறக்குமதிகள் ... | | 2,655 | |
| வர்த்தக நிலுவை (சொந்த வளங்கள்) ... | | | (— 165) |
| வர்த்தக நிலுவை (எல்லா இறக்குமதிகளும்) ... | | | — 746 |
| **2. சேவைக் கணக்கு** | | | |
| நாணயச் சார்பற்ற ... | — | — | — |
| துறைமுகப் போக்குவரத்தும், காப்புறுதியும் ... | 128 | 34 | + 94 |
| வெளிநாட்டுப் பயணம் ... | 17 | 22 | — 5 |
| முதலீட்டு வருமானம் ... | 11 | 120 | — 109 |
| (ஆ) இலாபமும், பங்கு இலாபமும் ... | 1 | 52 | — 51 |
| (ஆ) ஏனையவை (வட்டி) ... | 10 | 68 | — 58 |
| அரசாங்கச் செலவுகள் ... | 29 | 27 | + 2 |
| பல்வகைச் சேவைகள் ... | 69 | 141 | — 72 |
| சொந்த மாற்றல்கள் ... | 15 | 22 | — 7 |
| மொத்தச் சேவைகள் ... | 269 | 366 | — 97 |
| **3. மொத்த நடைமுறைக் கணக்கு (சொந்த வளங்கள்)** ... | **(2,178)** | **(2,440)** | **(— 262)** |
| **மொத்த நடைமுறைக் கணக்கு (எல்லா விடயங்களும்)** ... | **2,178** | **3,021** | **— 843** |
| **4. மூலதனக் கொடுப்பனவுகள்** ... | — | **392** | **— 392** |
| கடன்கள் ... | — | 77 | — 77 |
| நிரப்பலர் கொடுகடன் ... | — | 50 | — 50 |
| குறுந்தவணைக் கொடுகடன்கள் ... | — | 147 | — 147 |
| எண்ணெய் நட்டாடு, ஆ. வ. வ. ... | — | 12 | — 12 |
| சொந்த மூலதனம் ... | — | 10 | — 10 |
| ப. நா. நி. ... | — | 87 | — 87 |
| வங்கிக் கடன்பாடு ... | — | — | — |
| ஏனையவை ... | — | 9 | — 9 |
| மொத்த நடைமுறை, மூலதனக் கொடுப்பனவுகள் (சொந்த வளங்கள்) ... | | | (— 654) |
| மொத்த நடைமுறை, மூலதனக் கொடுப்பனவுகள் (எல்லா விடயங்களும்) ... | | | —1 235 |
| **5. நிதியீட்டல்** ... | | | |
| ச. நா. நி. கொடுப்பனவுகள் ... | 77 | — | + 77 |
| வங்கிக் கடன்பாடு ... | 227 | — | + 227 |
| இருபுடை நிலுவைகள் ... | 18 | — | + 18 |
| நிரப்பலர் கொடுகடன்கள் ... | 176 | — | + 176 |
| குறுந்தவணைக் கொடுப்பனவுகள் ... | 185 | — | + 185 |
| வெளிநாட்டு இருப்புச் சொத்துக்கள் ... | 86 | — | + 86 |
| பண்ட உதவி ... | 272 | — | + 272 |
| செயற் திட்ட, ஏனைவ உதவி ... | 89 | — | + 89 |
| நன்கொடைகள் ... | 46 | — | + 46 |
| தனியார் மூலதனம் ... | 9 | — | + 9 |
| ஏனையவை ... | 32 | — | + 32 |
| சிறப்பு எடுப்பு உரிமைகள் ... | — | — | — |
| பிழைகளும் தவறுகளும் ... | 18 | — | + 18 |
| **மொத்த நிதியீட்டம்** ... | **1,235** | **—** | **+ 1,235** |

(அ) தற்காலிகமானவை.

(அ)

**மதி நிலுவை**

| ரூபாய்கள் | | | பத்து இலட்சம் ஐ. அ. டொலர்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1970(அ) | | | 1969 | | | 1970(அ) | | |
| வரவு | பற்று | தேறிய | வரவு | பற்று | தேறிய | வரவு | பற்று | தேறிய |
| 2,011 | | | 321 | | | 338 | | |
| | 1,867 | | | 348 | | | 314 | |
| | 469 | | | 98 | | | 78 | |
| | 2,336 | | | 446 | | | 392 | |
| | | (+ 144) | | | (— 27) | | | (+ 24) |
| | | — 325 | | | — 125 | | | — 54 |
| — | 2 | — 2 | — | — | — | — | — | — |
| 110 | 35 | + 75 | 21 | 6 | + 15 | 18 | 6 | + 12 |
| 22 | 20 | + 2 | 3 | 4 | — 1 | 4 | 3 | + 1 |
| 11 | 153 | — 142 | 2 | 20 | — 18 | 2 | 26 | — 24 |
| 1 | 52 | — 51 | — | 9 | — 9 | — | 9 | — 9 |
| 10 | 101 | — 91 | 2 | 11 | — 9 | 2 | 17 | — 15 |
| 29 | 28 | + 1 | 5 | 4 | + 1 | 5 | 5 | — |
| 66 | 128 | — 62 | 12 | 24 | — 12 | 11 | 22 | — 11 |
| 15 | 30 | — 15 | 2 | 4 | — 2 | 3 | 5 | — 2 |
| 253 | 396 | — 143 | 45 | 61 | — 16 | 43 | 67 | — 24 |
| **(2,264)** | **(2,263)** | **(+ 1)** | **(366)** | **(409)** | **(— 43)** | **(381)** | **(386)** | **(— )** |
| **2,264** | **2,732** | **— 468** | **366** | **507** | **— 141** | **381** | **459** | **— 78** |
| — | **656** | **— 656** | — | **66** | **— 66** | — | **110** | **— 110** |
| — | 113 | — 113 | — | 13 | — 13 | — | 19 | — 19 |
| — | 62 | — 62 | — | 8 | — 8 | — | 10 | — 10 |
| — | 293 | — 293 | — | 25 | — 25 | — | 49 | — 49 |
| — | 4 | — 4 | — | 2 | — 2 | — | 1 | — 1 |
| — | 12 | — 12 | — | 2 | — 2 | — | 2 | — 2 |
| — | 161 | — 161 | — | 15 | — 15 | — | 27 | — 27 |
| — | — | — | — | — | — | — | — | — |
| — | 11 | — 11 | — | 2 | — 2 | — | 2 | — 2 |
| | | (— 655) | | | (— 109) | | | (— 110) |
| | | — 1,124 | | | — 207 | | | (— 189) |
| 57 | — | + 57 | 13 | — | + 13 | 9 | — | + 9 |
| 123 | — | + 123 | 38 | — | + 38 | 21 | — | + 21 |
| — | 75 | — 75 | 3 | — | + 3 | — | 13 | — 13 |
| 85 | — | + 85 | 30 | — | + 30 | 14 | — | + 14 |
| 434 | — | + 434 | 31 | — | + 31 | 73 | — | + 73 |
| — | 26 | — 26 | 14 | — | + 14 | — | 4 | — 4 |
| 263 | — | + 263 | 46 | — | + 46 | 44 | — | + 44 |
| 36 | — | + 36 | 15 | — | + 15 | 6 | — | + 6 |
| 75 | — | + 75 | 8 | — | + 8 | 13 | — | + 13 |
| 10 | — | + 10 | 2 | — | + 2 | 2 | — | + 2 |
| 53 | — | + 53 | 5 | — | + 5 | 9 | — | + 9 |
| 78 | — | + 78 | — | — | — | 13 | — | + 13 |
| 11 | — | + 11 | 3 | — | + 3 | 2 | — | + 2 |
| **1,225** | **101** | **+ 1,124** | **207** | — | **+ 207** | **206** | **17** | **+ 189** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

# அட்டவணை (ஆ)

## வெளிநாட்டு வளங்களும் அவற்றின் பயனும்

| விடயங்கள் | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | சதவீதப் பங்கு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1967 | 1968 | 1969 | 1970 | 1967 | 1968 | 1969 | 1970 |
| **அ. வளங்கள்** | | | | | | | | |
| 1. வணிகப் பொருள் ஏற்றுமதிகள் க.எ.பெ. ... | 1,650 | 1,976 | 1,909 | 2,011 | 70 | 68 | 56 | 58 |
| 2. சேவைக் கணக்குகள் ... | 216 | 255 | 269 | 253 | 8 | 9 | 8 | 7 |
| 3. மூலதன வரவுகள்— ... | 261 | 326 | 417 | 384 | 11 | 11 | 12 | 11 |
| அவற்றுள் | | | | | | | | |
| (அ) கடன்கள் (1) ... | 212 | 295 | 362 | 299 | 9 | 10 | 11 | 9 |
| (ஆ) நன்கொடைகள் (1) ... | 46 | 23 | 46 | 75 | 2 | 1 | 1 | 2 |
| (இ) தனியார் மூலதனம் ... | 3 | 3 | 9 | 10 | — | — | — | — |
| 4. குறுந்தவணைப் பொறுப்புகள் ... | 275 | 348 | 715 | 830 | 11 | 12 | 21 | 24 |
| அவற்றுள் | | | | | | | | |
| (அ) ப.நா.நிதியிலிருந்து பெற்ற மொத்த எடுப்பனவுகள் ... | 123 | 213 | 77 | 57 | 5 | 7 | 2 | 2 |
| (ஆ) சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ... | — | — | — | 78 | — | — | — | 2 |
| (இ) இருபுடைக் கொடுப்பனவு ஒப்பந்த நிலுவைகளின் அதிகரிப்பு ... | 80 | 42 | 18 | — | 3 | 2 | 1 | — |
| (ஈ) வெளிநாட்டு வங்கிகளிலிருந்து பெற்ற கடன்பாடு ... | 57 | — | 227 | 123 | 2 | — | 7 | 4 |
| (உ) குறுந்தவணைக் கொடுகடன்கள் ... | — | 84 | 185 | 434 | — | 3 | 5 | 12 |
| (ஊ) நிரப்பலர் கொடுகடன் ... | — | — | 176 | 85 | — | — | 5 | 2 |
| (எ) ஏனையவை .. | 15 | 9 | 32 | 53 | 1 | — | 1 | 1 |
| 5. ஸ்டேர்லிங் கடன் கடன்கரைப்புநிதி நீங்கலாக வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களின் வீழ்ச்சி .. | — | — | 90 | — | — | — | 3 | — |
| **மொத்தம்** ... | **2,402** | **2,905** | **3,399** | **3,478** | **100** | **100** | **100** | **100** |
| **ஆ. பயன்பாடு** | | | | | | | | |
| 6. வணிகப்பொருள் இறக்குமதிகள் கொ.க.க. | 1,985 | 2,356 | 2,655 | 2,336 | 83 | 81 | 78 | 67 |
| அவற்றுள்—உதவி ... | 258 | 323 | 581 | 469 | 11 | 11 | 17 | 13 |
| 7. சேவைக் கணக்கு .. | 216 | 258 | 366 | 396 | 9 | 9 | 11 | 11 |
| (அ) முதலீட்டு வருவாய்கள் ... | 32 | 24 | 120 | 153 | 1 | 1 | 4 | 4 |
| (ஆ) குடியகல்வோரின் மாற்றல்கள் ... | 31 | 21 | 15 | 30 | 1 | 1 | 1 | 1 |
| (இ) வட்டிக் கொடுப்பனவுகள் ... | 33 | 42 | 10 | 101 | 1 | 1 | 2 | 3 |
| 8. மூலதனக் கடன் குறைப்பு அல்லது தாயகத்திற்கு மீட்பிப்பு ... | 73 | 251 | 392 | 656 | 3 | 9 | 11 | 19 |
| (அ) தனியார் ... | 10 | 15 | 10 | 12 | — | 1 | 1 | — |
| (ஆ) அலுவலக .. | 45 | 61 | 77 | 113 | 2 | 2 | 2 | 3 |
| (இ) ப.நா.நி. இல் மீளக் கொள்வனவுகளும், தங்கக் கட்டணங்களும் ... | 18 | 48 | 87 | 161 | 1 | 2 | 3 | 5 |
| 9. நிரம்பலர் கொடுகடன்கள் ... | — | — | 50 | 62 | — | — | 1 | 2 |
| 10. குறுந்தவணைக் கொடுகடன்கள் ... | — | 98 | 147 | 293 | — | 3 | 4 | 8 |
| 11. வங்கிக் கடன்பாடுகள் ... | — | 29 | — | — | — | 1 | — | — |
| 12. ஏனையவை .. | — | — | 21 | 15 | — | — | 1 | — |
| 13. குறுந்தவணைப் பொறுப்புகள் (2) ... | — | 7 | — | 75 | — | — | 1 | 2 |
| 14. வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களின் அதிகரிப்பு (ஸ்டேர்லிங் கடன் கடன்கரைப்பு நிதியின் தேறிய தொகை) ... | 125 | 10 | — | 39 | 5 | — | — | 1 |
| 15. சமப்படுத்தும் விடயம் ... | + 3 | + 23 | - 14 | - 8 | — | 1 | — | — |
| **மொத்தம்** ... | **2,402** | **2,905** | **3,399** | **3,478** | **100** | **100** | **100** | **100** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

2. செயற் திட்ட, பண்ட உதவி வகையிற் பெறப்பட்ட உதவிகளை உள்ளடக்கும்.

1. குறுந்தவணைக் கடன்பாடுகள், இருபுடைக் கொடுப்பனவு ஒப்பந்த நிலுவை மாற்றங்களையும், விசேட கணக்கு வசதிகளைக் கொண்டிருக்கும் தொழில் நிலையங்களின் நிலுவை மாற்றங்களையும் கொண்டுள்ளன.